# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 வைகாசி 28 திங்கட்கிழமை 10.06.2024 கதிர் 225







## 13 ஆவது திருத்தம் குறித்து வாய் கிழியப் பேசும் தலைவர்களால் மாகாண சபைத் தேர்தலைக்கூட முறையாக நடத்த முடியவில்லை!

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் வடமராட்சியில் சாடல்



“மாகாண சபைத் தேர்தலைக் கூட நடத்த முடியாத தலைவர்கள் 13 ஆவது திருத்தம் குறித்து எவ்வாறு பேசுவார்கள் என்று நினைத்துக் கூடப் பார்க்க முடியாதுள்ளது. வடக்கு மாகாணத்திற்கு மாத்திரமல்ல முழு நாட்டுக்கும் நல்லிணக்கம், சகோதரத்துவம், பொறுப்புக்கூறல் மற்றும் பொறுப்புணர்ச்சி அவசியம் என்றபடியால், ஐக்கிய மக்கள் சக்தி அரசில் அடுத்த வருடம் முதல் காலாண்டில் மாகாண சபைத் தேர்தலை நடத்துவோம்” - என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

பிரபஞ்சம் தகவல் தொழிநுட்ப வேலைத்திட்டத்தின் கீழ், 228 ஆவது கட்டமாக 11 இலட்சத்து 77 ஆயிரம் ரூபா பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்கள், யாழ்ப்பாணம், வடமராட்சி கொற்றாவத்தை அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு வழங்கி வைக்கும் நிகழ்வு இன்று இடம்பெற்றது.

இதன்போது, பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினருக்கு ஒரு இலட்சம் ரூபா நிதியுதவியும் வழங்கி வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்.மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனும் கலந்துகொண்டார்.பாது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறினார். 2➤

## இலங்கையின் விவசாய நவீனமயமாக்கல் திட்டத்துக்குப் பங்களாதேஷ் ஒத்துழைப்பு

### ரணிலிடம் அந்நாட்டுப் பிரதமர் உறுதி



இலங்கையில் முன்னெடுக்கப்படும் விவசாய நவீனமயமாக்கல் திட்டத்திற்கு பங்களாதேஷ் ஆதரவளிக்கும் என இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனா உறுதியளித்தார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் 2➤

## அடுத்த ஆண்டுக்கான பட்ஜெட் முன்மொழிவு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட மாட்டாது?

### நிதி அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி எதிர்வு கூறல்

இந்த ஆண்டு இறுதியில், அடுத்த ஆண்டுக்கான பட்ஜெட் முன்மொழிவு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட மாட்டாது என நிதி அமைச்சின் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். அதன்படி, அடுத்த ஆண்டின் (2025) ஆரம்ப சில மாதங்களுக்கான இடைக்கால கணக்கொன்று சமர்ப்பிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வருட இறுதியில் (2024) தேர்தலொன்று நடத்தப்படவுள்ளதுடன், அதற்கமைய தெரிவாகும் ஏழாவது புதிய ஜனாதிபதி அல்லது புதிய அரசாங்கம் தமது கொள்கைகளுக்கமைய வரவு செலவுத் திட்டத்தை முன்வைக்க இடமளிக்க வேண்டும் எனும் நோக்கிலேயே இம்முறை வரவு செலவுத் திட்டம் முன்வைக்கப்பட மாட்டாது என கூறப்படுகின்றது.

இதேவேளை, தேர்தல்கள் நடத்தப்படுவதால் ஆட்சி மாற்றம் ஏற்படக் கூடும் என்பதால் வரவு செலவுத் திட்டப் பிரேரணையை கொண்டுவர முடியாது என மேற்படி நிதி அமைச்சின் உயர் அதிகாரி தெரிவித்துள்ளார். இது தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படாத போதிலும், இந்த வருட இறுதியில் எதிர்வரும் மாதங்களுக்கான வரவு செலவுத் திட்டத்தை முன்வைப்பதில் நடைமுறை சிக்கல்கள் ஏற்படும் எனவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார். (ரென-25)

## சர்வஜன வாக்கெடுப்பொன்றை நடத்தி அதன் முடிவின் படி தேர்தலில் போட்டியிடுவது குறித்து ரணில் தீர்மானிப்பாராம்!

### உதய கம்மன்பில எம்.பி. ஆரூடம் கூறுகிறார்



எதிர்வரும் ஜூலை மாதம் முதல் வாரத்தில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட்டு அதன் முடிவின் படி தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவாரா? இல்லையா என்பது தொடர்பில் தீர்மானிக்கப்பட உள்ளதாக பிவித்துரு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே கம்மன்பில அவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிகையில், “சர்வஜன வாக்கெடுப்பு முடிவுகளின்படி ரணில் விக்ரமசிங்க மூன்றாவது இடத்தையே 2➤

## பிரதம நீதியரசர் மற்றும் சட்டமா அதிபர் கருத்துக்களினால் தேர்தல்கள் ஆணைக்குழு தொடர்பில் சந்தேகம் வலுக்கிறது!

### எதிர்க்கட்சியின் பிரதான அமைப்பாளர் லக்ஷ்மன் கிரியெல்ல குற்றச்சாட்டு



தேர்தல்கள் ஆணைக்குழு தொடர்பில் பிரதம நீதியரசர் மற்றும் சட்டமா அதிபரினால் வெளியிடப்பட்டுள்ள கருத்துக்கள் காரணமாக மேற்படி ஆணைக்குழு மீதான நம்பிக்கை தொடர்பில் அவதானிக்கப்பட வேண்டுமென எதிர்க்கட்சியின் பிரதான அமைப்பாளர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் கூறியபோது, “தேர்தல் ஆணைக்குழு சார்பில் இனி மேல் முன்னிலையாகப் போவதில்லை என உச்சநீதிமன்றத்தில் சட்டமா அதிபர் தெரிவித்துள்ளார். அதேபோல், தேர்தலை நடத்தும் 2➤

## வல்லிபுரத்தில் கேரள கஞ்சாவுடன் வத்திராயன் இளைஞர் ஒருவர் கைது

யாழ். வடமராட்சி, வல்லிபுரம் காட்டுப் பகுதியில் ஒரு கோடி ரூபா பெறுமதியான கேரள கஞ்சாவுடன் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பருத்தித்துறையில் உள்ள இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் அவர்கள் கரவெட்டி - யாக்கரு விசேட அதிரடிப் படையினருடன் இணைந்து பருத்தித்துறை - வல்லிபுரம் காட்டுப் பகுதியில் சுற்றிவளைப்பை மேற்கொண்டனர்.

இதன்போது இரண்டு சாக்குகளில் அடைக்கப்பட்ட ஒரு கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதியான 29 பொதிகள் அடங்கிய 60 கிலோகிராம் கேரள கஞ்சாவுடன் வத்திராயன் பகுதியைச் சேர்ந்த 25 வயதுடைய நபர் கைது செய்யப்பட்டார்.

கைதான நபர் மீட்கப்பட்ட கேரள கஞ்சாவுடன் பருத்தித்துறைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (05)

## தமிழர் புலப்பெயர்வு நூல் ஆளுநருக்கு கையளிப்பு



(ஹஸ்பர் ஏ.எச்)

சர்வதேச தமிழ் மரபு அறக்கட்டளையின் தலைவர் டொக்டர் கே.சுபாஷினியை கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தலைவருமான செந்தில் தொண்டமான் ஜேர்மனி பிராங்பேர்ட் நகரில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இக்கலந்துரையாடலின் போது, பல நூற்றாண்டுகளுக்கு முன் உலக அளவில் தமிழ் விரிவாக்கத்தின் வரலாறு தொடர்பான "தமிழர் புலப்பெயர்வு" நூலை டொக்டர் கே.சுபாஷினி, ஆளுநருக்கு வழங்கி வைத்தார்.

இதன்போது, இலங்கையில் பெருந்தோட்ட சமூகத்தின் 200வது வருடத்தின் முதல் நினைவு முத்திரை ஆளுநரால் டொக்டர் கே.சுபாஷினிக்கு வழங்கி வைக்கப்பட்டது.

ஜேர்மனி பிராங்பேர்ட் நகரில் உள்ள புலம்பெயர் தமிழ் மக்களையும் செந்தில் தொண்டமான் சந்தித்துக் கலந்துரையாடல் மேற்கொண்டார்.

## பிரதம நீதியரசர் மற்றும் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொறுப்பு தேர்தல் ஆணைகுழுவிற்கு உள்ளது என பிரதம நீதிபதியரசரும் தெரிவித்துள்ளார். இதன் மூலம் தேர்தல் ஆணைக்குழுவின் மீது பல்வேறு தரப்பிலிருந்தும் குற்றச்சாட்டுகள் எழுந்து வருகின்றன.

எப்படியிருப்பினும் பொதுவாக தேர்தலை நடத்த வேண்டும் என்றே அனைவரும் கூறி வருகின்றனர். தேர்தல் ஆணைக்குழுவில் பலவகையிலும் அரசியல் தலையீடுகள் உள்ளன. தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர் ஒருவருக்கு ஆளுநர் பதவி வழங்கப்பட்டது. இன்னுமொருவருக்கு வடக்கு மாகாண ஆளுநர் பதவி வழங்கப்பட்டது. எனவே, இந்த தேர்தல் ஆணைக்குழுவிற்கு நாலாபுரத்திலிருந்தும் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. விரைவில் ஜனாதிபதி தேர்தல் வரவுள்ளது. அதனால்தான் இதனை கூறுகின்றேன்", என்றார். (ரென-23)



## சஜித்தின் நிகழ்வில் அங்கஜனும் பங்கேற்பு

எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸவின் பிரபஞ்சம் வேலைத்திட்டத்தின் 228 ஆவது கட்ட நிகழ்வில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனும் கலந்துகொண்டார்.

சஜித்தால் முன்னெடுக்கப்பட்டு வரும் 'பிரபஞ்சம்' ஸ்மார்ட் வகுப்பறைகள் திட்டத்தின் 228 ஆவது கட்டத்தின் கீழ், யாழ். வடமராட்சி கொற்றாவத்தை அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு 11 இலட்சத்து 77 ஆயிரம் ரூபா பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறை இன்று வழங்கி வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜனும் கலந்துகொண்டார். (05)

## சர்வஜன வாக்கெடுப்பொன்றை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெறுவாராயின், ஜனாதிபதி தேர்தலில் அவர் போட்டியிட மாட்டார்" என குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேர்தலுக்குத் தேவையான அனைத்து வேலைகளையும் செய்து வருகின்ற போதிலும், கட்சி அலுவலகங்களை திறந்தாலும், மக்களுக்கு நிவாரணங்கள் வழங்கினாலும் குறித்த சர்வஜன வாக்கெடுப்பில் மூன்றாவது இடத்திற்கு வந்தால், அவர் நிச்சயமாக போட்டியிலிருந்து விலகுவார் எனவும், யாரேனும் இன்னொரு தரப்புடன் கூட்டு சேர்ந்து போட்டியிலிட்டால் மாத்திரமே அவர் கிட்டத்தட்ட 15 வீதம் முதல் 20 வீதம் வரையிலான வாக்குகளையாவது அவர் பெற முடியும், இல்லையேல் 'அம்போ' தான் எனவும் கம்மன்பில மேலும் தெரிவித்துள்ளார். (ரென-24)

## இலங்கையின் விவசாய ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதவிப் பிரமாண வைபவத்துக்காக புதுடில்லி சென்ற இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனாவுக்கும் இடையிலான இருதரப்பு பேச்சு இன்று காலை நடைபெற்றது. இதன்போதே பங்களாதேஷ் பிரதமர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கூட்டுறவு முறையின் அடிப்படையில் பங்களாதேஷில் செயற்படுத்தப்படும் விவசாய நவீனமயமாக்கல் வேலைத்திட்டத்தை ஆராய்ந்து இலங்கையின் விவசாய நவீனமயமாக்கல் வேலைத்திட்டத்தை வெற்றியடையச் செய்வதற்காக இலங்கை விவசாயத்துறை நிபுணர்கள் குழுவொன்றை பங்களாதேஷிற்கு அனுப்புவதற்கும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இணக்கம் தெரிவித்தார்.

பங்களாதேஷிற்கும் இலங்கைக்கும் இடையில் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை கைச்சாத்திடுவது குறித்தும் இருநாட்டுத் தலைவர்களும் கலந்துரையாடியதோடு, இந்திய சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் நிறைவடைந்ததன் பின்னர் பங்களாதேஷுடன் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை கைச்சாத்திடப்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டினார்.

பங்களாதேஷின் தனியார் முதலீட்டாளர்களை இலங்கையில் முதலீடு செய்வதற்கான வாய்ப்புகளை வழங்குவதாகவும் பங்களாதேஷ் பிரதமர், இலங்கை ஜனாதிபதியிடம் உறுதியளித்தார்.

இலங்கைக்கும் பங்களாதே/க்கும் இடையில் பயணிகள் படகு சேவையை மேற்கொள்வது குறித்தும் இந்தச் சந்திப்பின் போது கவனம் செலுத்தப்பட்டது.

இதேவேளை, பங்களாதேஷில் நடைபெறும் பிம்ஸ்டெக் மாநாட்டில் பங்கேற்குமாறு இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு பங்களாதேஷ் பிரதமர் அழைப்பு விடுத்தார். மாநாடு நடைபெறும் காலப்பகுதியில் இலங்கையில் தேர்தல் நடைபெற இருப்பதால், பிரதமர் தினேஷ் குணவர்தன மற்றும் வெளியுறவு அமைச்சர் அலி சப்ரி ஆகியோர் மாநாட்டில் பங்குபற்றுவார்கள் என ஜனாதிபதி தெரிவித்தார்.

தேர்தலின் பின்னர் பங்களாதேஷுக்கு விஜயம் செய்வதாகவும் பங்களாதேஷ் பிரதமரிடம் இலங்கை ஜனாதிபதி உறுதியளித்தார்.

இந்தச் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனா, இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் இலங்கையின் பொருளாதாரத்தை மீளமைக்க முடிந்ததையிட்டு பெருமகிழ்ச்சியடைவதாகத் தெரிவித்தார்.

பொருளாதார மீட்சிக்கு பங்களாதேஷ் மற்றும் இந்தியாவிலிருந்து கிடைத்த ஆதரவை நினைவு கூர்ந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அதற்காக தனது நன்றியைத் தெரிவித்தார். (05)

## 13 ஆவது திருத்தம் குறித்து .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"பல்வேறு தலைவர்கள் யாழ்ப்பாணம் மக்களை அரசியல் இசை நாற்காலி விளையாட்டுக்கு உட்படுத்தியுள்ளனர். அவர்கள் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் வந்து வெவ்வேறு இடங்களில் பல்வேறு விடயங்களைச் செய்கின்றார்கள்.

13 ஆவது அரசமைப்புத் திருத்தம் என்பது விசித்திரமான ஒன்றல்ல, அது எமது நாட்டின் சட்டப் புத்தகத்தில் உள்ள விடயமொன்றாகும். யார் அது குறித்து என்ன கதை சொன்னாலும், 13 ஆவது திருத்தத்தின் மூலம் உருவாக்கப்பட்ட அனைத்து மாகாண சபைகளும் தற்போது செயலிழந்துள்ளன. ஐக்கிய மக்கள் சக்தி அரசில் முன்னைய தேர்தல் முறையிலேயே மாகாண சபைத் தேர்தல்கள் நடத்தப்படும்.

தற்போது மாகாண சபைகள் இயங்காவிட்டாலும் மாகாண சபைத் தவிசாளருக்கு சம்பளம் வழங்கப்படுகின்றது. பெயருக்கு மாகாண சபைகள் இருந்தாலும், மக்கள் பிரதிநிதிகள் மூலம் மக்களுக்கு ஆற்றப்பட வேண்டிய சேவைகள் முன்னெடுக்கப்படவில்லை. மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்குத் தேவையான அனைத்து சட்ட ரீதியிலான ஏற்பாடுகளையும் செய்து, மாகாண சபைக் கட்டமைப்பின் ஊடாக சேவையை நாடும் அனைவருக்கும் நீதி நியாயத்தை பெற்றுத் தருவோம்.

எமது நாட்டுக்கு அறிவை மையமாகக் கொண்ட பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப வேண்டும். அதன் மூலம் ஸ்மார்ட் நாடு உருவாக்கப்பட வேண்டும். இதற்கு ஸ்மார்ட் கல்வி நடவடிக்கை அவசியமாகும். இங்கு சிங்களம் மட்டும், தமிழ் மட்டும் என கூறிக் கொண்டு இருக்காமல், ஆங்கில மொழி மற்றும் கணினி தகவல் தொழில்நுட்ப கல்வியை ஊக்குவிக்க வேண்டும். உலகின் சர்வதேச தொழிலாளர் சந்தையின் தேவைக்கு ஏற்றவாறு பாடத்திட்டம் வகுக்கப்பட வேண்டும். அத்துடன், யாழ். மாவட்டத்தையும் வடக்கு மாகாணத்தின் ஏனைய பகுதிகளையும் அறிவின் மையங்களாக மாற்றுவது யதார்த்தமாக்கப்படும்" - என்றார். (05)







உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# உலக சுற்றாடல் தினத்தையொட்டி ஒலுவில் கடற்கரையில் சிரமதானம்



(எம் எப். நவாஸ்)

உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் பி.டி.எம் இர்பான் தலைமையில் ஒலுவில் வெளிச்சவீட்டு கடற்கரையை சுத்தப்படுத்தும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில், வெளிச்சவீட்டைச் சூழவுள்ள பகுதிகள் முற்றாகச் சுத்தப்படுத்தப்பட்டதுடன், மரநடுகை நிகழ்வும் ஏற்பாடு செய்யப்பட்டது.

இதற்காக அட்டாளைச்சேனை பிரதேச செயலக ஊழியர்கள் மற்றும் நிருவாகிகள், பிரதேச சுகாதார வைத்திய அதிகாரிகள், லைட் ஹவுஸ் துறை மீனவர் சங்க மீனவர்கள், இலங்கை கடற்படை பிரிவினர், பசுமை வலைய உறுப்பினர்கள், மற்றும் ஒலுவில் இளைஞர்கள் பங்குபற்றி சிறப்பித்தனர்.

மேலும் ஓபிற் லங்காபிளாஸ்டிக் நிறுவனத்தால் பிளாஸ்டிக் கழிவுகளை அகற்றுவதற்காக குப்பை தொட்டி ஒன்றும் வழங்கப்பட்டது.

## ஜி.எம்.எம்.எஸ். பாடசாலையில் கட்டிட விஸ்தரிப்புக்கான அடிக்கல் நடுகை



(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

சாய்ந்தமருது அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையின் மூன்று மாடி கட்டிட விஸ்தரிப்புக்கான அடிக்கல் நடும் விழா இன்று பாடசாலையில் இடம்பெற்றது.

பாடசாலையின் அதிபர் எம்.ஐ.எம். இல்லியாஸ் தலைமையில் இடம்பெற்ற இந்த அடிக்கல் நடும் நிகழ்வில், திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் கல்முனை அபிவிருத்திக் குழு தலைவருமான எஸ்.எம்.எம் முஷாரப் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்தார்.

நிகழ்வில் கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.எம். சஹ்துல் நஜீம், சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும், கல்முனை பிரதிக் கல்வி பணிப்பாளரும் சாய்ந்தமருது கோட்டக் கல்விப் பணிப்பாளருமான எம். எச்.எம். ஜாபீர் நிகழ்வில் விசேட அதிதியாகவும் கலந்து சிறப்பித்ததோடு, பாடசாலையின் அபிவிருத்தி சங்க செயலாளர் பொறியியலாளர் எம்.ஐ. எம்.ரியாஸ், பாடசாலையின் பிரதி அதிபர்கள், ஆசிரிய, ஆசிரியைகள் அபிவிருத்திச் சங்க நிறைவேற்று குழு உறுப்பினர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது மௌலவி ஏ.கே.எம். சமீர் பலாஹியால் துஆப் பிரார்த்தனை மேற்கொள்ளப்பட்டது.

நிகழ்வில் வருகை தந்த அனைத்து அதிதிகளுக்கும் நினைவுச் சின்னம் வழங்கி, பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

## சம்மாந்துறை, வீரத்திடல் அல் ஹிதாயா மகா வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா




(எம்.எம்.ஜெஸ்மின்)

சம்மாந்துறை, வீரத்திடல் அல் ஹிதாயா மகா வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழா பாடசாலை ஆராதனை மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

இதன் போது கடந்த வருடம் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை, க. பொ. த சா.த பரீட்சை, க. பொ. த உயர் தரப் பரீட்சை ஆகியவற்றில் சித்தியடைந்த மாணவர்கள் பாராட்டி, கௌரவிக்கப்பட்டனர்.

பாடசாலை அதிபர் திருமதி ஏ.எம். முனாஷிர் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் க.பொ. த உயர் தரப் பரீட்சையில் 3 ஏ சித்திகளைப் பெற்ற நான்கு மாணவர்களும் கௌரவிக்கப்பட்டனர்.






## நீர்நொச்சித்தாழ்வு சித்தி விநாயகர் ஆலயத்தில் நித்யஶ்ரீ மகாதேவனின் தெய்வீக இசைக் கச்சேரி

அரியாலை நீர்நொச்சித்தாழ்வு சித்தி விநாயகர் ஆலயத்தின் மகா கும்பாபிஷேகத்தை முன்னிட்டு

இந்தியாவின் பிரபல கர்நாடக இசை பாடகி நித்யஸ்ரீ மகாதேவனின் "தெய்வீக இசைக் கச்சேரி" இடம்பெறவுள்ளது.

இந்த இசை நிகழ்வில் பங்கேற்பதற்காக நித்தியஸ்ரீ உள்ளிட்ட குழுவினர் பலாலி விமான நிலையம் ஊடாக இன்று மதியம் யாழ்ப்பாணம் வருகைதந்தனர்.

யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்த நிதியஶ்ரீ மகாதேவன் உள்ளிட்ட குழுவினரை பலாலி விமானநிலையத்தில் வைத்து பிரதம கணக்காளர் அகிலன், குடிவரவு குடியகல்வு அதிகாரி ராஜ்குமார், இசை நிகழ்வின் அனுசரணையாளர் திருமதி நேதாஜி தேன்மொழி, மற்றும் ஜெயந்தி திவாகர் ஆகியோர் வரவேற்றனர்.

இன்று மாலை 7மணியளவில் நீர்நொச்சிதாழ்வு ஆலய மூன்றில் குறித்த இசைநிகழ்சி இடம்பெறவுள்ளது. (01)

# மண்டைதீவு கடலில் படுகொலை செய்யப்பட்ட 31 மீனவர்களின் 38 ஆவது ஆண்டு நினைவு



## குருநகர் நினைவுத் தூபியில் இடம்பெற்றது



மண்டைதீவு கடலில் படுகொலை செய்யப்பட்ட 31 மீனவர்களின் 38ஆவது ஆண்டு நினைவு தினம் இன்று யாழ்ப்பாணத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.

குறித்த நினைவுதின அஞ்சலி நிகழ்வானது யாழ்ப்பாணம் குருநகர் பகுதி யில் படுகொலை செய்யப்பட்ட 31 மீனவர் நினைவாக அமைக்கப்பட்டுள்ள நினைவுத் தூபியில் இடம்பெற்றது.

இந்த அஞ்சலி நிகழ்வில் படுகொலை செய்யப்பட்ட மீனவர்களின் உறவி னர்கள், கிறிஸ்தவ மதகுருமார்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டு கொல்லப்பட்ட மீனவர்களுக்காக வழிபாடுகளில் ஈடுபட்டதுடன் அவர்களுக்கு அஞ்சலியும் செலுத்தினர்.

1986ஆம் ஆண்டு ஜ/ன் மாதம் 10ஆம் திகதி குருநகர், இறங்குதுறையில் இருந்து கடற்தொழிலுக்கு சென்ற மீனவர்கள் 31 பேரும் மண்டைதீவு கடலில் வைத்து கடற்படையினரால் படுகொலை செய்யப்பட்டிருந்தனர் என்பது குறிப் பிடத்தக்கது. (01)

# தேர்தல்களை முன்னிட்டு பட்டாசு உற்பத்தி உத்வேகத்தோடு ஆரம்பம்!



எதிர்வரும் தேர்தல் முடிவுகளை அறிவிக்கும்போது வெற்றியைக் கொண்டாடுவோரின் தேவை கருதி 50 வீதத்துக்கும் அதிகமான பட்டாசு உற்பத்தியாளர்கள் பட்டாசுகளை விநியோகிக்கும் நோக்கில், தமது உற்பத்தியை ஆரம்பித்துள்ளதாக அகில இலங்கை பட்டாசு உற்பத்தியாளர் சங்கத்தின் தலைவர் தினேஷ் பெர்னாண்டோ தெரிவித்தார்.

இந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் அல்லது நாடாளுமன்றத் தேர்தல் நடந்தால், பட்டாசு மற்றும் இதர வெடிகளுக்கான தேவை அதிகரிக்கும் என்பதால், இவ்வாறு உற்பத்தியை ஆரம்பித்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

நாடளாவிய ரீதியில், மாவட்ட மட்டத்தில் அதிகளவான வேட்பாளர்கள் பொதுத் தேர்தலில் போட்டியிடுவதால், வேட்பாளர்களின் கூட்டங்கள், வேட்பாளர்களை வரவேற்பது, தேர்தல் முடிவுகள் அறிவிப்பின் பின்னர் வெற்றிக் கொண்டாட்டம் ஆகியனவற்றிற்காக பட்டாசுகளுக்கு அதிக கிராக்கி ஏற்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (டரென-22)

# ரி-20 உலகக் கிண்ணத் தொடரில் பாகிஸ்தானை வீழ்த்தியது இந்தயா!



ரி-20 உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில்நேற்று நடைபெற்ற பாகிஸ்தான் அணிக்கு எதிரான விறு விறுப்பான போட்டியில் இந்திய அணி 6 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது

நியூயோர்க்கில் இடம்பெற்ற இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்திருந் தது

முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட இந்திய அணி, பாகிஸ்தான் அணியின் பந்துவீச்சைச் சமாளிக்க முடியாது தடுமாறி, 19 ஓவர்கள் நிறைவில், அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 119 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது.

இந்திய அணி சார்பில் ரிஷப் பண்ட் 42 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். பாகிஸ்தானின் நஸீம் ஷா, ஹரீஸ் ரவுப் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளையும், மொகமட் அமீர் 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

அதன்பின்னர் 120 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி இந்திய அணி தனது பந்துவீச்சினால் வேகமாக ஓட்டங்களைப் பெற முடியாது கட்டுப்படுத்தியது. 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுகளை இழந்து 113 ஓட்டங்களைப் பெற்ற பாகிஸ்தான் 6 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

துடுப்பாட்டத்தில் பாகிஸ்தான் அணி சார்பில் மொகமட் ரிஸ்வான் அதிகபட்சமாக 31 ஓட்டங்களை எடுத்திருந் தார். இந்திய அணியின் பும்ரா 3, ஹர்திக் பாண்டியா 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

போட்டியின் ஆட்ட நாயகனாக பும்ரா தெரிவானார். (04)


# இலங்கை சட்டத்தரணிகள் சங்கத் தலைவரை பதவி விலகுமாறு கோரி நாளை ஆர்ப்பாட்டம்

## ஜப்பான் நிறுவனம் வழங்கிய நிதியை முறைகேடாகப் பயன்படுத்தினாராம் !

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்திற்கு ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம், ஊழலுக்கு எதிரான செயற்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்காக வழங்கிய சுமார் 20 மில்லியன் ரூபாவை முறைகேடாக பயன்படுத்தியதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ள இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவரை, அப்பதவியிலிருந்து வெளியேறுமாறு வலியுறுத்தும் ஆர்ப்பாட்டமொன்று நாளை (11) பிற்பகல் 1 மணிக்கு கொழும்பு நீதிமன்ற வளாகத்திற்கு எதிரே நடைபெறும் என சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி குணரத்ன வன்னிநாயக்க தெரிவித்துள்ளார்.

கடந்த 30ஆம் திகதி இடம்பெற்ற சட்டத்தரணிகள் சங்கத்தின் மாதாந்த சபைக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாகவும், விசாரணைகள் முடியும் வரை 10 ஆம் திகதிக்கு முன்னர் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் தற்காலிகமாகப் பதவி விலகாவிட்டால் கடும் எதிர்ப்பு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ரென-21)

# 8 ஆவது சமகால முகாமைத்துவ சர்வதேச ஆய்வு மாநாடு புதனன்று யாழில் ஆரம்பம்!




"உலகளாவிய நிலைபேண் தன்மைக்கான ஊக்கமளிக்கும் மாற்றம்" என்ற ஆய்வுக் கருப்பொருளிலான 8ஆவது சமகால முகாமைத்துவ சர்வதேச ஆய்வு மாநாடு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீட மண்டபத்தில் நாளை மறுதினம் புதன் கிழமை ஆரம்பமாகவுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீடத்தின் ஏற்பாட்டில் வரும் 12 மற்றும் 13 ஆகிய இரு திகதிகளிலும் இந்த ஆய்வு மாநாடு இடம்பெறவுள்ளது.

முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீடாதிபதி பேராசிரியர் ந.கெங்காதரன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த ஆய்வு மாநாட்டில் யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறீசற்குணராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

அவுஸ்திரேலியாவின் மெல்பேர்ன் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் சைமன் பெல் மற்றும் இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் டி.என்.ஜெயந்தா ஆகியோர் முதன்மைப் பேச்சாளர்களாகக் கலந்து கொண்டு கருத்துரைகளை வழங்கவுள்ளனர்.

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஆய்வாளர்கள் பலர் கலந்து கொள்ளவுள்ள இந்த ஆய்வு மாநாட்டில் வணிகங்களை முகாமை செய்தல், மனிதவள முகாமைத்துவம், நிறுவன நடத்தை, வணிகத் தொழில்நுட்பம், நிதி மற்றும் கணக்கியல், சந்தைப்படுத்தல், சுற்றுலாத்துறை மற்றும் பொருளாதார சமூககொள்கைகள் போன்ற ஆய்வுப் பரப்புகளை கொண்ட ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

நிலைபேண் தன்மைக்கான ஊக்கமளிக்கும் மாற்ற விருத்தியினை ஏற்படுத்தகூடிய சர்வதேச அளவிலான அபிவிருத்தியை நோக்கியதான பார்வையை புரிந்து கொள்ளவும் உள்வாங்கவும் திறந்த புலமைத்துவக் கலந்துரையாடல் நாளை மறுதினம் 13 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் யாழ்ப்பாண வளாகம் எனும் பெயரில் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் ஒரு அங்கமாக ஆரம்பிக்கப்பட்டு ஐம்பது ஆண்டுகளைப் பூர்த்தி செய்து பொன்விழாக் காணும் அதே வேளை முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீடம் இருபத்தி ஐந்து வருடங்களை பூர்த்தி செய்து வெள்ளிவிழாக் காண்கின்றது.

பல்கலைக்கழகத்தின் பொன்விழா மற்றும் பீடத்தின் வெள்ளிவிழாவின் அடையாளமாக இந்த மாநாடு இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

## ஸஹிரியன் '90 நண்பர்களால் கல்லூரியில் மரக்கன்றுகள்



(அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்முனை ஸாஹிரா தேசிய கல்லூரியின் பழைய மாணவர்களான ஸஹிரியன் '90 நண்பர்களின் அமைப்பினால் உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு தாய்ப் பாடசாலையான கல்முனை ஸாஹிரா தேசியக் கல்லூரியில் பலா மரக் கன்றுகள் நேற்று நடுகை செய்யப்பட்டன.

இதன்போது, பூச்சாடியுடன் பூமரக்கன்றுகள் அன்பளிப்புச் செய்யும் நிகழ்வும் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கல்லூரி அதிபர் எம்.ஐ.ஜாபிர் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

## சம்பியனானது காரைதீவு கூடைப்பந்தாட்டக் கழகம்!



(வி.ரி.சகாதேவராஜா)

களுதாவளை கெனடி விளையாட்டுக் கழகம் நடாத்திய கிழக்கு மாகாண கூடைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் காரைதீவு கூடைப்பந்தாட்ட கழகம் சம்பியனானது.

இச்சுற்றுத் தொடரில், கிழக்கு மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் 6 கூடைப்பந்தாட்ட கழகங்கள் பங்குபற்றியிருந்தன.

சுற்றுத் தொடரின் இறுதிப் போட்டியானது நேற்று (09) ஞாயிற்றுக்கிழமை களுதாவளை மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் பிற்பகல் 5.30 மணியளவில் இடம்பெற்றது.

இறுதிப் போட்டியானது காரைதீவு கூடைப்பந்தாட்ட விளையாட்டு கழகத்திற்கும், சிவானந்தா கூடைப்பந்தாட்ட விளையாட்டு கழகத்திற்கும் இடையே நடைபெற்றது.

இதில், காரைதீவு கூடைப்பந்தாட்ட விளையாட்டு கழகம் 81:69 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றியினை தமதாக்கி, கெனடி கூடைப்பந்தாட்டச் சுற்றுத் தொடரின் சாம்பியனானது.

காரைதீவு விளையாட்டு கழகம் சுற்றுத் தொடரின் முதலாவது போட்டியில் சிவானந்தா விளையாட்டுக் கழகத்தையும், இரண்டாவது போட்டியில் தன்னாமுனைக் கழகத்தையும் வென்று, அரையிறுதிப்போட்டியில் களுதாவளை மகா வித்தியாலய அணியை வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு தெரிவாகியிருந்தது.

கெனடி விளையாட்டுக் கழகத்தின் தலைவர் த.சர்ஜின் தலைமையில் நடைபெற்ற இந்த இறுப் போட்டி நிகழ்வுக்கு அதிதிகளாக அம்பாறை மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கத்தின் தலைவர் ச. நந்தகுமார், களுதாவளை சுயம்புலிங்க பிள்ளையார் ஆலய பரிபாலன சபையின் தலைவர் க.பாஸ்கரன், சிவசக்தி ஸ்ரீ முருகன் ஆலய பரிபால சபையினர், செட்டிபாளையம் கண்ணகி அம்மன் ஆலய தலைவர் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.



# சேனையூர் நெல்லிக்குளம் மலை உடைப்புக்கு மக்கள் எதிர்ப்பு!





(ஹஸ்பர் ஏ.எச்)

திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் கிழக்கு, சேனையூர் கிராம சேவகர் பிரிவில் உள்ள நெல்லிக் குளம் மலைத் தொடரின் பாறைகளை உடைப்பதற்கு சனிக்கிழமை (08) பாறை உடைப்பு இயந்திரத்துடன் உடைப்பு வேலைகளை ஆரம்பிக்க முயன்ற போது அப்பகுதி மக்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். இதனால் உடைப்பு வேலைகள் நிறுத்தப்பட்டுள்ளன.

ஆனால், உடைப்பு இயந்திரம் அப்பகுதியில் இருந்து இன்னும் அகற்றப்படவில்லை. இவ்விடயம் சம்மந்த மாக சேனையூர் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் பொலிஸில் முறைப்பாடு செய்ததாக தெரிவித்தார்.

ஞாயிற்றுக்கிழமை (09) அப்பகுதியில் கூடிய மக்கள் கருத்துத் தெரிவிக்கையில்,

நாட்டின் ஏனைய பிரதேசங்களின் அபிவிருத்திக் காக எமது வாழ்வாதரத்தினை அழித் தொழிக்கும் நட வடிக்கையினை உடன் நிறுத்த வேண்டும். என்று வலியுறுத்தினர்.

வாழ்வாதாரத்தினை பாதிக்கும் வகையில் மலை களை உடைப்பதற்கு அனுமதி வழக்கியது யார்?, என்ற கேள்வியை அவர்கள் எழுப்பினர்.

சேனையூர் கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர் கருத்துத் தெரிவிக்கையில், நாளாந்தம் கூலித் தொழிலையும், நெற்செய்கை, கால் நடை வளர்ப்பு போன்ற வாழ்வாதார முயற்சிகளை நம்பி வாழ்ந்து வரும் மக்கள்தான் இப்பகுதியில் இருக்கின்றனர். குளம், வயல், காடு போன்ற வளங்களையே நம்பி வாழ்கின்றனர்.

மலையைச் சூழவுள்ள வயல்கள், மேய்ச்சல் தரை இயற்கைக் காட்டு வளம் என்பன கல்லுடைப்பால் அழிவுறும் அபாயம் ஏற்படும், என்றார்.

இவ்மலையில் இந்து வழிபாட்டு அடையாளங்க ளும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# தரமற்ற சவர்க்காரம் பயன்படுத்துவதால் குழந்தைகளுக்கு பல்வேறு உபாதைகள்!

## சுகாதார சேவைகள் சங்கத்தின் தலைவர் எச்சரிக்கை

தரமற்ற சவர்க்காரம் பயன்படுத்துவதால் குழந்தைகளுக்கு பல்வேறு உபாதைகள் ஏற்படுவதாக அரச குடும்ப சுகாதார சேவைகள் சங்கத்தின் தலைவர் பிரியங்கனி சுசங்கிகா தெரிவித்துள்ளார்.

நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமை காரணமாக சில பெற்றோர்கள் குழந்தைகளுக்கு தரமற்ற குழந்தை சவர்க்காரத்தினை பயன்படுத்துவதாகவும் அதன் விளைவுகள் எதிர்காலத்தில் ஏற்படும் எனவும் அரச குடும்ப சுகாதார சேவைகள் சங்கத்தின் தலைவர் பிரியங்கனி சுசங்கிகா குறிப்பிட்டுள்ளார்.

இந்த நாட்களில் குழந்தைகளுக்கு சில ஒவ்வாமைகள் ஏற்படுவதாகவும் குறித்த ஒவ்வாமையானது தரமற்ற குழந்தை சவர்க்காரத்தினை பயன்படுத்துவதால் ஏற்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்தோடு, குழந்தைகளுக்காக கொள்வனவு செய்யப்படும் சவர்க்காரத்தின் தர நிர்ணயம் தொடர்பாக அதிக அவதானம் செலுத்துமாறும் அவர் பெற்றோருக்கு வலியுறுத்தியுள்ளார். (04)






# அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க கடமைகளைப் பொறுப்பேற்றார்



(எம் எப்.நவாஸ்)

அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராக எஸ்.ஜெயராஜன் இன்று தனது கடமைகளை பொறுப்பேற்றார்.

அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராக இலங்கை நிர்வாக சேவை தரம் 1 அதிகாரியான காரைதீவு பிரதேச செயலாளர் சிவஞானம் ஜெகராஜன் நியமிக்கப்பட்டுள்ளார்.

பொதுச்சேவை ஆணைக்குழுவின் பரிந்துரைக்கமைவாக பொது நிர்வாக அமைச்சு இந் நியமனத்தை வழங்கி இருக்கின்றது.

அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்திக அபேவிக்ரம முன்னிலையில் தனது கடமைகளை பொறுப்பேற்றார்.

இந் நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர், பிரதேச செயலாளர்கள், உதவி பிரதேச செயலாளர்கள், திட்டமிடல் பணிப்பாளர், பிரதி, உதவி திட்டமிடல் பணிப்பாளர்கள்,கணக்காளர்கள், மாவட்ட செயலக உயர் அதிகாரிகள் உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# கல்முனை கிறீன் பீல்ட் வீட்டுத்திட்டத்திற்கு அருகில் நீண்டநாளாக அகற்றாத குப்பைகள்



(அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்முனை கிறீன் பீல்ட் வீட்டுத்திட்டத்திற்கு அருகில் அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலைக்கு பின்னாலுள்ள நீரோடைக்கு அண்மையில் பல மாதங்களாக குவிந்துள்ள திண்ம கழிவுகள் கல்முனை மாநகர சபையால் இதுவரை அகற்றப்படாத குறித்து பிரதேசவாசிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இத்திண்மக் கழிவுகளில் விலங்கு கழிவுகளும் சேர்ந்துள்ளதால் துர்நாற்றம் வீசுவதாகவும், கால்நடைகள் இவற்றை கிளறுவதால் இக்குப்பைகள் பல இடங்களுக்கும் பரப்பப்பட்டு, வீதியில் பயணிக்க முடியாத நிலைமை தோன்றியுள்ளதாகவும் பிரதேசவாசிகள் மேலும் தெரிவித்தனர்.


JRIDE
BEYOND THE ROAD
Safety and comfort are our concern
ஜேரைட்
JRIDE
TAXI APP FROM JAFFNA
இலங்கை முழுவதும் | Islandwide
DOWNLOAD PASSENGER APP:
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
jride
JRide - Beyond the Road
Speed IT net • Travel & Local
JRide Driver: Drive & Deliver
இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்கலாம்!
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
GET IT ON Google Play
Download on the App Store
வாகன உரிமையாளர்களே ஓட்டுனர்களே!
உங்கள் தனிப்பட்ட மற்றும் வாடகை வாகனங்களை பயன்படுத்தி உங்கள் வருமானத்தை அதிகரிக்க ஒரு தீர்வு!
இதுவரை பதிவு செய்யாதவர்கள் JRide Driver செயலியில் இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் சேவையை தொடங்கலாம்!
DOWNLOAD DRIVER APP:
YOU CAN EASILY REGISTER & ADD YOUR VEHICLE
GET IT ON Google Play
Download on the App Store
SCHEDULED BOOKING
New Feature
புதிய வசதி
நீண்ட தூர பயணத்திற்கு வாகனத்தினை முன்பதாகவே புக்செய்து வைக்க விரும்புகின்றீர்களா?
விமான நிலையத்திற்கு / விமான நிலையத்தில் இருந்து வாகனம் தேவையா?
எமக்கு அழையுங்கள்; தொலைபேசி ஊடாகவோ; WhatsApp மூலமாகவோ தொடர்பு கொள்ளவும்.
HOTLINE : 706563213 / 703563213
JRIDE TAXI APP
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk
மகிழ்ச்சியான பயணம் திருப்தியான கட்டணம்!